நமது சக்தி: நமது எண்ணங்கள். 3-JAN 1956 Regd. No. M 6207.

# கிராமோதயம்

ஆசிரியர்: ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - மார்ச் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 10

## சாம்ராஜ்ய வாதத்தைநோக்கி முன்னேற்றமா?

நாட்டை இயந்திரத் தொழில்மயமாக்க விரும்புகிறீர்கள். வாங்கும் சக்தி பெருக கைத்தொழில் புரட்சி தேவை என்று கூறுகிறீர்கள். நம் நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அவற்றின் தன்மை என்ன? இந்தியாவிலுள்ள அவ்வளவு இயந்திரத் தொழிற்சாலைகளும் சேர்ந்து மிகவும் குறைவான நபர்களுக்கே வேலை கொடுக்க முடிகிறது. இயந்திரத் தொழிற்சாலைகளில் வேலைசெய்து பிழைப்பவர்களின் எண்ணிக்கை நமது தேச ஜனத்தொகையில் மிகச் சிலவே. இந்த தொழிற்சாலை ஊழியர்களின் எண்ணிக்கையை மிக அதிகமாக உயர்த்தினாலும், பெரிய பலன் ஏதும் ஏற்பட்டுவிடாது.

பாக்டரிகள் தபாலாபீஸ்கள் அல்ல. பாக்டரிகள் ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்தாக வேண்டும். அந்த சாமான்களுக்கு மார்க்கெட் தேடியாக வேண்டும். அவ்வளவு சாமான்களும் நமக்கு உள்நாட்டில் தேவைப்படாவிடில், அவைகளைப் பிறர்மீது திணிக்க நமக்கு "காலனிகள்" (குடியேற்ற நாடுகள்) வேண்டியிருக்கும். நமக்கு அடிமைப்பட்ட ஒரு சாம்ராஜ்யம் (Colonial Empire) தேவைப்படும். தற்போதய உலகம் அதற்கு இடம் கொடாது!

மார்ச்சு 5
பட்ஜட் விவாதத்தின்
போது.

— ராஜாஜி

## பூதானமும் கிராமக் குடியரசும்

இந்திய வாசிகள் கிராமங்களில் வாழ்பவர்கள், ஏழு லட்சம் கிராமங்கள் கொண்டதே இந்திய தேசம். எது வரையில் கிராமமக்கள் தங்கள் கிராமத்தை ஒரே குடும்பம் என நினைத்து அதற்குண்டான வழிகளில் முன்னேற நினைக்கவில்லையோ, அதுவரையில் கிராம முன்னேற்றத்தைப்பற்றி பேசுவது முழுமையும் வீணேயாகும். கிராமமக்களிடையே ஏற்றத்தாழ்வு இருக்கும் வரையிலும், அதிகமான நல்ல நிலங்கள் வசதியுள்ளவர்களின் சொந்தமாக இருக்கும் வரையிலும், கிராமத்தில் வேலையற்றவர்கள் அதிகமிருக்கும் வரையிலும் சொந்த நிலமில்லாமல் கூலிக்காக வேலைசெய்து, குறைந்தது ஆறுமாத காலம் வேலையற்றிருக்கும் நிலமை நீடிக்கும் வரையிலும் எவ்விதம் கிராமங்களிடையே ஒன்றுபட்ட அபிப்பிராயம் கிராம முன்னேற்றத்தில் காணமுடியும்? காண்பது கடினம். ஏழை கிராம மக்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வது முடியாத காரியமேயாகும்.

நமது விவசாயம் மிகவும் பயங்கரமான நிலைமையை அடைந்திருக்கிறது. பல பாகங்களில் பலத்த மழைகளினால் மண் அரிப்பு ஏற்பட்டும், காடுகளைத் திருத்தி அமைத்ததில் பல பாகங்களில் மழையற்றும் போய்விட்டது. இந்நிலைமையை நாம் சமாளிக்கவேண்டுமானால், உடனடியாக இதற்குத் தக்க வழிகளில் நாம் கிராம மக்கள் அனைவரும் ஒரே கூட்டுமுகமாக வேலை செய்ய திட்டமிட்டாக வேண்டும்.

நம் நாட்டை பாகிஸ்தானுக்குப் பிரித்து கொடுக்கப்பட்டதில் நல்ல விளை நிலங்கள் நம்மை விட்டுப் போய்விட்டன. பயங்கரமான உணவுப் பிரச்னை ஏற்பட்டு விட்டது. "அதிக உணவுப் பொருள் உற்பத்தி இயக்கம் எத்தனை தூரம் வெற்றியடைந்தது என்பது நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். நிலத்தில் விளைவிக்கும் பொருட்களின்மீது எந்தவிதமான உரிமையும் இல்லாமல் நிலமில்லா 6 கோடி ஜனங்களுக்கு உற்பத்திப் பெருக்கத்தில் எவ்விதம் ஊக்கம் ஏற்பட முடியும். தங்கள் நிலத்தில் எந்தவிதமான உழைப்பும் செய்யாமல் எங்கோ இருந்துவரும் நிலச்சுவான்தார், தங்கள் நிலத்தில் அதிக உற்பத்தியை பெருக்க வேண்டும் என்பதை எண்ணுவதில்லை. நிலமில்லாத குடியானவனோ தன் உழைப்பின் முழுப்பலனையும் உழைப்பின்றி மறைவில் நிற்கும் நிலச்சுவானுக்கு கொடுக்க மனமின்றி உழைப்பில் சிரத்தையில்லாமல் இருக்கிறான். இவ்விரண்டு முறையாலும் நமது விவசாயம் மிகவும் சீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டது.

சில மாதங்களுக்குமுன் பஞ்சத்தாலும், பட்டினியாலும் மடிந்து கொண்டிருந்த சீனா தேசமானது இன்று தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதுடன், பிற பற்றாக்குறை நாடுகளுக்கும் கொடுத்துதவக்கூடிய நிலமையை வெகு சீக்கிரத்தில் இன்று அடைந்திருக்கிறது. இதன் இரகசியம் என்ன?

சீனா தேசத்திலே முதன் முதலில் ஏற்றத்தாழ்வில்லாமல் மக்கள் அனைவருக்கும் நிலம் பங்கிடப்பட்டது. தங்களுக்கென்று நிலம் கிடைத்த உடன் ஜனங்களிடம் ஓர் உற்சாகமும் ஊக்கமும் ஏற்பட்டு விட்டது. புதிய உலகம், புதிய வாழ்க்கை அவர்களுக்கு தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஏகோபித்த பொதுநல ஒற்றுமைக்கும், பொதுநல முன்னேற்றத்திற்கும், மக்களிடையே உணர்ச்சி ஏற்பட்டு விட்டது, எல்லோரும் சமம் என்ற உடன், அவர்கள் மத்தியில் ஒற்றுமை கூட்டுறவு என்பதைப் பரப்ப மிகவும் சுலபமாகி விட்டது. இலட்சக்கணக்கான சீனமக்கள் பெரிய திட்டங்களைச் செய்வதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரம் கால்வாய்களையும், நீர்த்தேக்கங்களையும் எந்தவிதமான சர்க்கார் நிர்ப்பந்தமின்றி செய்வதற்கு தயாராகிவிட்டனர்.

(தொடர்ச்சி 47-ம் பக்கத்தில் காண்க)

3 - JAN 1956

கிராமோதயம்

மார்ச் 15 1954

## நமது சக்தி; நமது எண்ணங்கள்!

பீஹார் மாகாணத்தில் 3 லட்சத்திற்கு மேற்பட்ட நபர்கள் நிலதானம் செய்திருக்கிறார்கள். இது சாதாரண விஷயமல்ல. இவர்களில் அநேகர் சிறு விவசாயிகள். நடுத்தர வகுப்பினர்களும் கூட அதிகம் கொடுத்திருக்கிறார்கள். நிலம் ஒருவருடைய தனிப்பட்ட சொத்து அல்ல, அதன்பேரில் தனி நபர்களுக்கு உரிமை கிடையாது. கடவுள் தான் எல்லாவற்றிற்கும் அதிகாரி என்றுதானே அவர்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறது? நீலவானம், காற்று, ஜலம், வெளிச்சம் ஆகியவைகள் கடவுளால் நமக்களிக்கப்பட்டவைகள். எனவே இவைகள் யாவருக்கும் கிடைக்கவேண்டும் நிலத்தை தானே உண்டாக்கியதாக ஒருவரும் சொல்லமுடியாது. ஆனால் நிலம்தான் நம்மை உண்டாக்கி இருக்கிறது. இறந்த பிறகும் இதே நிலத்திலேயே கலந்து விடுகிறோம். எனவே நாம் நிலத்தின் சொந்தக்காரர்கள் அல்ல, அதன் குழந்தைகள். எனவே நிலத்தின் மேல் நமக்கு உரிமையுண்டு. ஒவ்வொருவருக்கும் அதில் பங்கு கிடைக்கவேண்டும். எனவே நிலமுள்ளவர்கள் நிலமில்லாதவர்களுடைய உரிமையை உணர்ந்து அவர்களுக்கும் பங்கு கொடுக்கவேண்டும்.

உங்களுக்கு இதில் திருப்திதானா என்று என்னைக்கேட்கிறார்கள். நான் நினைத்ததைக் காட்டிலும் அதிகமான வேலை நடந்திருக்கிறது. நாங்கள் கேட்டதுமே ஜனங்கள் யோசிக்காமல் நிலம் கொடுத்துவிட்டால் அதில் சிறிது அச்சம் ஏற்படுகிறது. இதில் ஏதோ சிறிய குறையிருப்பதாகத் தென்படுகிறது. எனவே நீங்கள் தீர ஆலோசிக்காமல் கொடுத்தால் அது நல்லதல்ல. நீங்கள் பீதியடைந்து நிலம் கொடுத்தீர்களேயானால் அதில் எனக்கு திருப்தி ஏற்படாது. நீங்கள் நன்றாக சிந்தித்து மனப்பூர்வமாகக் கொடுத்தாலே நல்லது.

இங்கு வந்திருக்கும் பள்ளி மாணவர்கள் நமது கருத்தை புரிந்து கொண்டால் நமது வேலை மிகவும் எளியதாகும். நமது கருத்தின்பேரில் உள்ள நம்பிக்கை மற்றெதிலும் கிடையாது. சென்ற காலத்தில் இருந்த கருத்துக்கள் இப்பொழுது கிடையாது. கருத்துக்கள் மாறிக்கொண்டே வருவதுபோல் வாழ்க்கையும் மாறிக்கொண்டே வருகிறது. மகான்களை தரிசிக்கலாம், நல்ல விஷயங்களைக் கேட்கலாம் என்ற எண்ணம் வந்து ஒன்றிரண்டு மாதங்கள் யாத்திரைக்குக் கிளம்பலாம் எனத்தோன்றுகிறது. வீட்டில் உள்ள சௌகரியங்கள் யாத்திரையில் கிடையாது. இதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். அதிகாலையில் எழுந்திருந்து, நடக்கவேண்டும். தினசரி, ஜலமும் காற்றும் மாறுகிறது. இதனால் கஷ்டங்களும் ஏற்படுகின்றன. இருந்தாலும் யாத்திரை போக வேண்டும் என்ற எண்ணத்தினால் இவைகளை நாம் பொருட்படுத்துவதில்லை. எனவே திடமான கருத்துக்கள் ஏற்பட்டு விட்டால் அதற்காக எவ்விதமான கஷ்டங்களையும் சகிக்க நாம் தயாராகி விடுகிறோம். ஏகாதசியன்று, வீட்டில் பால், பழம் முதலியவைகள் இருந்தும்கூட உபவாசம் இருக்கிறோம். ஏன்? இதில் நமக்கு ஒருவிதமான ஆனந்தம் ஏற்படுகிறது. மனதில் திடமான எண்ணம் உண்டாகி இருப்பதால் வீட்டில் உள்ள ஆகாரத்தை கண்ணெடுத்துப் பார்க்காமல் பட்டினி இருப்பதிலேயே ஆனந்தம் அடைகிறோம்.

எனவே மனிதனுடைய கருத்துக்களின் போக்கிற்கேற்ப அவன் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படுகிறது. மிருகங்களுக்கு அப்படியல்ல. அவைகளுக்கு உணவு, தண்ணீரைத் தவிர இதர விஷயங்களில் கருத்து செல்வதில்லை. உதாரணமாக நாய்கள் ஒன்றும் கிடைக்காமல் போனால் தவிர மனப்பூர்வமாக பட்டினி இருப்பது கிடையாது. ஆனால் மனிதன் அப்படியல்ல, அவன் ஜபதபங்கள் செய்கிறான், தான தருமம் செய்கிறான். இதனால் கஷ்டங்களும் ஏற்படுகின்றன. மனதில் நல்லது என்று தோன்றிவிட்டால் அதைப் பூர்த்தி செய்ய எந்த கஷ்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. இம்மாதிரி அநேக தியாக புருஷர்கள் இருக்கிறார்கள். எனவே நமது கருத்தின் ஆதாரத்தின் பேரில் தான் வேலை நடக்கிறது. ஆகையால்தான் நீங்கள் கருத்துக்களை நன்றாகத் தெரிந்துகொண்டால் நம்முடைய வேலை மிகவும் எளிதாகிறது என நான் சொல்லுகிறேன்.

இங்கு பள்ளி மாணவர்கள் வந்திருக்கிறார்கள் இவர்களைக்காண எனக்கு சந்தோஷமேற்படுகிறது. குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கான பொறுப்பு தேசத்தைச் சார்ந்தது. அவர்களின் பேரில் தான் வருங்காலத்திய பொறுப்பு இருக்கிறது. சத்தியத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்வதற்கே அவர்கள் கல்வி கற்கிறார்கள். அத்துடன் அவர்கள் கையினாலும் வேலை செய்ய வேண்டும். உலகத்தில் சிலரே வேலை செய்ய, அவர்களுடைய பலனை பலர் அனுபவிக்கிறார்கள். ஏழைகள் சுரண்டப்படுகிறார்கள். முதலில் உணவளியுங்கள், பிறகு சாப்பிடுங்கள். படித்தவர்களின் பேரில்தான் இதன் முழுப்பொறுப்பும் இருக்கிறது. கிராமத்தில் உள்ள பெரியவர்கள் ஒரு காலத்தில் பசியால் வாடியவர்களுக்கு உணவு அளித்து விட்டு, பிறகுதான் சாப்பிட்டார்கள். அந்த நிலைமை மறுபடியும் வரவேண்டும்.

பள்ளிப் பிள்ளைகளுக்கு தேவையான நூலை தானே நூற்கவும், காய்கறிகள் பயிரிடவும், தன் இருப்பிடத்தையும், தனது துணிகளையும் தானே சுத்தம் செய்து கொள்ளவும் கற்பிக்கவேண்டும். வேலை செய்யாமல் சாப்பிடக்கூடாது என்று அவர்கள் பழகவேண்டும் இம்மாதிரி அவர்கள் படிக்கும் பொழுதே வேலை செய்து வந்தால் சிறந்த கர்மயோகிகள் ஆவார்கள். தற்காலத்திய காலேஜ் படிப்பு பிரயோஜனமற்றது. அவர்களுக்குக் கிடைக்கும் படிப்புடன், தொழில்களையும் கற்றுக் கொண்டால் அவர்கள் பராக்கிரமமாகவும், நற்குணமுள்ளவர்களாகவும் ஆவார்கள்.

இக்கூட்டத்திற்கு வந்திருப்பவர்கள் மில் ஆடை அணிந்திருக்கிறார்கள். கிராமத்திலேயே பருத்தி விளைவித்தால், அதை நூற்று, நெய்து துணி தயாரித்துக்கொள்ளலாம். பிள்ளைகள் இதைக் கற்றுக்கொண்டால் தேசத்தின் உற்பத்தி பெருகும். இதில், நம்பிக்கை, ஆனந்தம் உண்டாகும். அவர்களுடைய தைரியம் வளரும். படிப்புடன் அவர்கள் கையினால் வேலைசெய்து வருவார்களாயின் அவர்கள் நல்ல குணமுள்ளவர்களாகவும் மாறுவார்கள். உண்மையையே கடைப்பிடிப்ப

(தொடர்ச்சி 48-ம் பக்கம் காண்க)

3-JAN 1956

## பொங்கல் சர்வோதய பக்ஷ விழா காலத்தில் தமிழ் நாட்டில் கதர் விற்பனை.

### திருப்பூர் விபாக்.

| | கிளையின் பெயர். | கதர் விற்பனை ரூபாய். |
|---|---|---|
| 1 | கோயமுத்தூர் | 22,386 |
| 2 | தாராபுரம் | 2,559 |
| 3 | ஈரோடு | 9,638 |
| 4 | கொடுமுடி | 4,591 |
| 5 | சிவகிரி | 1,093 |
| 6 | கோபிசெட்டிபாளையம் | 5,428 |
| 7 | காந்திநகர் | 8,400 |
| 8 | காங்கயம் | 7,715 |
| 9 | ஊதியூர் | 1,953 |
| 9 a | ராசிபாளையம் | 2,139 |
| 10 | கொடுவாய் | 4,117 |
| 11 | குண்டடம் | 4,832 |
| 12 | மூலனூர் | 4,140 |
| 13 | அரிக்காரன்வலசு | 1,393 |
| 14 | நம்பியூர் | 3,542 |
| 15 | தைலாம்பாளையம் | 8,412 |
| 16 | படியூர் | 5,458 |
| 17 | பல்லடம் (வடுகபாளையம்) | 2,665 |
| 18 | கேத்தனூர் | 1,275 |
| 19 | புளியம்பட்டி | 3,803 |
| 20 | விரபாண்டி | 10,059 |
| 21 | திருப்பூர் விற்பனைக்கிளை | 7,150 |
| 22 | ஊத்துக்குளி | 3,978 |
| 23 | சென்னிமலை | 4,248 |
| 24 | குன்னத்தூர் | 4,251 |
| 25 | உதகமண்டலம் | 8,719 |
| 26 | ஆத்தூர் (சேலம் ஜில்லா) | 3,174 |
| 27 | சிதம்பரம் | 10,146 |
| 28 | திண்டிவனம் | 10,814 |
| 29 | திருக்கோவிலூர் | 5,953 |
| 30 | திருப்பாப்புலியூர் | 7,886 |
| 31 | திருவண்ணாமலை | 5,902 |
| 32 | வேலூர் (வ. ஆ. ஜில்லா) | 12,432 |
| | மொத்தம் ரூ. .... | 2,00,251 |

## கிராமோதய கதர் சங்கங்களில் கதர் விற்பனை

*(1—1—'54 முதல் 12—2—'54 முடிய)*

### திருப்பூர் விபாக்.

| | கிராமோதய கதர் சங்கங்களின் பெயர் | மொத்தக்கதர் விற்பனைக் கிரயம் ரூ. |
|---|---|---|
| 1 | வெங்கடாபுரம் | 240 |
| 2 | திப்பம்பாளையம் | 438 |
| 3 | தாமரைக்காட்டுவலசு | 611 |
| 4 | குமரக்கவுண்டன்வலசு | 203 |
| 5 | சோமன்கோட்டை | 278 |
| 6 | காட்டூர் புதூர் | 262 |
| 7 | வஞ்சிபாளையம் | 230 |
| 8 | அ. வேலாயுதம்பாளையம் | 240 |
| 9 | சடையபாளையம் | 666 |
| 10 | மரவபாளையம் | 273 |
| 11 | செங்காளிபாளையம் | 339 |
| 12 | காஞ்சீபுரம் (குண்டடம் வழி) | 447 |
| 13 | ஜோத்தியம்பட்டி | 682 |
| 14 | கத்தாங்கண்ணி | 276 |
| 15 | கோப்பம்பாளையம் | 481 |
| 16 | புதுப்பாளையம் | 81 |
| 17 | பெரியாரிபட்டி | 217 |
| 18 | சூரியப்பம்பாளையம் | 345 |
| 19 | சேஷய்யம்பாளையம் | 160 |
| 20 | சேடம்புதூர் | 156 |
| 21 | ஆர்தொழுவு | 219 |
| 22 | முத்துப்புலவன்வலசு | 163 |
| 23 | செம்மங்காளிபாளையம் | 366 |
| 24 | முதலிபாளையம் | 1,075 |
| 25 | துலுக்கன்வலசு | 1,180 |
| 26 | வானவராயநல்லூர் | 1,224 |
| 27 | குள்ளம்பாளையம் | 188 |
| 28 | கண்ணன்கோயில் | 417 |
| 29 | வாவிப்பாளையம் | 696 |
| 30 | மேட்டூர் | 160 |
| 31 | பூலாம்பாடி | 279 |
| 32 | இச்சிப்பட்டி | 278 |
| 33 | கொத்தனூர் | 1,206 |
| 34 | நொச்சிப்பாளையம் | 393 |
| 35 | செங்காட்டூர் | 422 |
| 36 | சல்லிமேட்டுப்புதூர் | 86 |
| 37 | உச்சனம் வலசு | 380 |
| 38 | குள்ளக்காளிபாளையம் | 451 |
| | மொத்தம் ரூ. .... | 16,206 |

### சென்னை விபாக்.

| கிளைகளின் பெயர் | கதர் விற்பனை ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| சென்னை காதிவஸ்திராலயம் | 63,892 | 6 | 6 |
| காஞ்சிபுரம் | 6,691 | 9 | 6 |
| மொத்தம் ரூ. ... | 70,584 | 0 | 0 |

### மதுரை ராமநாதபுரம் விபாக்.

| | கிளைகளின் பெயர் | கதர் விற்பனை. ரூபாய். |
|---|---|---|
| 1 | மதுரை விற்பனை | 52,693 |
| 2 | மதுரை உற்பத்தி | 771 |
| 3 | திண்டுக்கல் | 8,246 |
| 4 | பழனி | 3,710 |
| 5 | பெரியகுளம் | 2,713 |
| 6 | திருமங்கலம் | 3,250 |
| 7 | செ. புதுப்பட்டி | 539 |
| 8 | பேரையூர் | 2,343 |
| 9 | காரைக்குடி | 8,697 |
| 10 | பரமக்குடி | 4,758 |
| 11 | அருப்புக்கோட்டை | 3,046 |
| 12 | விருதுநகர் | 6,243 |
| 13 | சாத்தூர் | 2,535 |
| 14 | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 8,893 |
| 15 | மம்சாபுரம் | 1,427 |
| 16 | வ. புதுப்பட்டு | 5,226 |
| 17 | சுந்தரபாண்டியம் | 3,224 |
| 18 | சிவகாசி | 1,647 |
| 19 | இராஜபாளையம் | 11,112 |
| 20 | முகவூர் | 1,622 |
| 21 | எஸ் ஆங்குளம் | 26 |
| 22 | கம்பம் | 2,715 |
| | மொத்தம் .... | 1,35,442 |

ஏஜென்சி

| | | |
|---|---|---|
| 1 | தேனி | 3,242 |
| 2 | திருப்பத்தூர் (ராமநாதபுரம்) | 2,169 |
| 3 | காந்தி கிராமம் | 2,364 |
| 4 | வடக்கம்பட்டி | 61 |
| 5 | மதுரை | 774 |
| 6 | இராமநாதபுரம் | 272 |
| | மொத்தம் ரூ. ... | 8,882 |
| | மொத்த விற்பனை ரூ. .... | 1,44,324 |

### திருநெல்வேலி விபாக்.

| | கிளைகளின் பெயர். | கிளைகளில் கதர் விற்பனைக் கிரயம் ரூ. | கிளைகளைச் சேர்ந்த கிராமோதய சங்கங்களில் விற்பனை ரூ. |
|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி | 4,539 | 5,139 |
| 2 | காலாங்கரைப்பட்டி | 87 | 5,416 |
| 3 | சங்கரன்கோவில் | 4,253 | 2,187 |
| 4 | புதுப்பட்டி | 699 | 2,112 |
| 5 | கரிவலம்வந்தநல்லூர் | 773 | 4,585 |
| 6 | கழுகுமலை | 1,449 | 1,260 |
| 7 | புளியன்குடி | 2,848 | 1,849 |
| 8 | கீழப்பாவூர் | 1,261 | |
| 9 | வீரவநல்லூர் | 1,521 | |
| 10 | திருநெல்வேலி | 12,754 | 3,813 |
| 11 | தூத்துக்குடி | 7,310 | 450 |
| 12 | திருச்செந்தூர் | 1,867 | 890 |
| 13 | திசையன்விளை | 1,321 | 3,033 |
| 14 | ஏரல் | 4,316 | 1,556 |
| 15 | சிப்பிப்பாறை | 411 | 4,930 |
| 16 | விளாத்திகுளம் | 1,769 | 6,431 |
| 17 | தென்காசி | 4,209 | |
| 18 | வள்ளியூர் | 695 | |
| 19 | கடம்பூர் | 546 | 4,751 |
| 20 | ஏழாயிரம்பண்ணை | 216 | 1,231 |
| 21 | நமசிவாயபுரம் | 10 | 3,976 |
| | | 52,854 | 53,609 |

மொத்தம் கதர் விற்பனை } ரூ. 1,06,463

### தஞ்சை-திருச்சி விபாக்.

| | கிளைகளின் பெயர். | கதர் விற்பனை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | அதிராம்பட்டினம் | 1,180 | 1 | 0 |
| 2 | கும்பகோணம் | 17,776 | 8 | 9 |
| 3 | மன்னார்குடி | 8,939 | 0 | 3 |
| 4 | மாயவரம் | 8,024 | 11 | 9 |
| 5 | நாகப்பட்டினம் | 5,390 | 13 | 0 |
| 6 | பட்டுக்கோட்டை | 4,333 | 4 | 3 |
| 7 | பூவத்தகுடி | 1,076 | 1 | 6 |
| 8 | தஞ்சாவூர் | 10,204 | 14 | 3 |
| 9 | திருவையாறு | 2,283 | 6 | 9 |
| 10 | திருவாரூர் | 8,762 | 15 | 6 |
| 11 | கரூர் | 5,909 | 4 | 3 |
| 12 | காட்டுமுன்னார் | 5,071 | 11 | 3 |
| 13 | செந்துறை | 597 | 14 | 3 |
| 14 | தேனூர் | 548 | 9 | 0 |
| 15 | திருச்சிராப்பள்ளி | 26,675 | 8 | 9 |
| 16 | திருமாந்துறை | 383 | 6 | 3 |
| | மொத்தம் ரூ. .... | 1,07,158 | 2 | 3 |

| | ஏஜென்ஸி | கதர் விற்பனை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | புதுக்கோட்டை | 4,352 | 13 | 3 |
| 2 | சீர்காழி | 846 | 1 | 9 |
| 3 | குடவாசல் | 3,165 | 9 | 3 |
| 4 | திருக்காட்டுப்பள்ளி | 1,206 | 2 | 3 |
| 5 | வேதாரண்யம் | 796 | 5 | 9 |
| 6 | விருத்தாசலம் | 3,426 | 11 | 3 |
| 7 | அய்யம்பேட்டை | 263 | 9 | 0 |
| | மொத்தம் ரூ. ... | 14,057 | 4 | 6 |
| | மொத்தம் கதர் விற்பனை ரூ. | 1,21,215 | 6 | 9 |

## அறுபது ஆண்டுகளில் நமது ஆடை பிரச்னை.

சென்ற 60 வருடங்களில் நம் நாட்டு ஆடை பிரச்னை பல உருவங்களில் தோன்றி, மாறியுள்ளது. மில்கள் வளர்ந்து வந்ததின் காரணமாக வெளிநாட்டு துணி இறக்குமதியும், நூல் இறக்குமதியும் குறைந்து வந்துள்ளது. சமீபகாலத்தில் வெளிநாட்டு வர்த்தகத்திலும் நமது துணிகள் ஒரு பெரும் பங்கு கொண்டுள்ளது. அதே சமயத்தில் நமது கைத்தறிகள் சிறுகச் சிறுக குற்றுயிராகும் நிலையையும் அடைந்துள்ளது. ஆனால் நமது ஆடை சப்ளை நிலை பெரிய அளவுக்கு அபிவிருத்தி அடைந்துவிட்டதாகத் தெரியவில்லை. இந்த விபரங்களை இத்துடன் இணைத்துள்ள புள்ளி விபரங்கள் தெளிவுபடுத்துகின்றன. இவை ("The Indian Cotton Textile Industry"—(An Economic Analysis, by S. D. Mehtha) ஸ்ரீ மேத்தா அவர்கள் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் "இந்திய பஞ்சாலைத் தொழில்" (ஒரு பொருளியல் ஆராய்ச்சி) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

கைத்தறிகள் மூலம் உற்பத்தி என்பதில் கதரும் அடங்கியுள்ளதாக கருதப்படவேண்டும். கதர் சராசரி வருடத்திற்கு சுமார் 2 கோடி கெஜம் உற்பத்தியாவதாக மதிப்பிடலாம். — ஆசிரியர்

## நாட்டிற்குத் துணி கொடுப்போர்—1896-1950 வரை.

(புள்ளி விபரங்கள் கோடிக்கணக்கில் தரப்பட்டு இருக்கிறது.)

| சப்ளை செய்வோர் | | 1896—97 முதல் 1898—99 | 1906—7 முதல் 1908—9 | 1916—17 முதல் 1918—19 | 1926—27 முதல் 1928—29 | 1936—37 முதல் 1938—39 | 1948 முதல் 1950 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. மில்கள் (கெஜங்கள்) | | 29.5 | 66.9 | 130.1 | 194.3 | 374.2 | 350.0 |
| 2. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி | ,, | 191.1 | 215.4 | 139.7 | 187.0 | 65.4 | 48.0 |
| 3. மொத்தம் மில்துணி | ,, | 220.6 | 282.1 | 269.8 | 381.3 | 439.6 | 354.8 |
| 4. கைத்தறிகள் | ,, | 99.6 | 107.2 | 72.0 | 100.0 | 106.4 | 72.1 to 79.8 |
| 5. விசைத்தறிகள் | ,, | .... | .... | .... | .... | 3.6 | 18.3 ,, 20 6 |
| 6. மொத்தம் கைத்தறித் துணி | ,, | 99.6 | 107.2 | 72.0 | 100.0 | 110.0 | 90.4 ,, 100.4 |
| 7. மொத்தம் (3+6ம்) | ,, | 320.2 | 389.3 | 341.8 | 481.3 | 549.6 | 445.2 ,, 455.2 |
| 8. சராசரி தலைக்கு சப்ளை விகிதம் (கஜங்கள்) | | 11·0 | 12·6 | 9·8 | 13·0 | 14·4 | 12·7 முதல் 12.9 |
| 9. மில்கள் பங்கு (சத விகிதம்) | | 9% | 16% | 37% | 41% | 68% | 77·2 ,, 77·7% |
| 10. கைத்தறிகள் ,, | ,, | 31% | 27% | 20% | 20% | 18% | 15·8 ,, 17·9% |
| 11. இறக்குமதி ,, | ,, | 60% | 57% | 43% | 39% | 13% | 1% குறைவாக |

(4[illegible]-ம் பக்கத் தொடர்ச்சி)

## பூதானமும் கிராமக் குடியரசும்

இந்திய தேசீய பண்பாட்டில் பூதான இயக்கம் ஓர் ஒப்பற்ற சாதனம். இதன் மூலம் சமாதான முறையில் நிலப்பங்கீடும், கிராம மக்களிடையே சகோதரத்துவத்தையும், கிராம ராஜ்யத்தையும் ஸ்தாபிக்க கூட்டு உணர்ச்சியையும் ஏற்படுத்த முடியும்.

பூதான இயக்கம் மூன்று கட்டங்களை உடையது, முதலில் நிலமில்லாதவருக்கு நிலம் கொடுத்தல், இரண்டாவது இருப்பவர்களிடமிருந்து நிலம் பெறுதல், மூன்றுவதாக கிராம இராஜ்யத்தை ஸ்தாபித்தல்.

முன்காலங்களில் கிராம ராஜ்யம் கிராமங்களில் நன்கு ஸ்தாபிதம் செய்யப்பட்டிருந்தது. நிலம் முழுமையும் கிராமத்திற்கு பொதுவாக சொந்தமாக இருந்தது. கிராமப் பெரியோர், குடும்பங்களுக்குத்தக்கவாறும், நல்ல முறையில் உழைக்கக் கூடியவர்களுக்கும் நிலத்தைப் பங்கிட்டு விவசாயம் செய்யக் கொடுத்துவந்தார்கள்.

அவர்கள் கிராமத்திலுள்ள எல்லாவற்றையும் நடத்திவந்தார்கள். விவசாயம், நீர் பாய்ச்சுதல்; குளங்களை மராமத்து செய்வது, கல்வி, கிராமப் பாதுகாப்பு இவ்விதசகலமானதையும் கண்காணித்து வந்தார்கள். நெசவாளி, குயவர், கருமான் செக்கான் முதலிய பலருக்கு வருடமுழுமைக்கும் வேலைகளைக் கொடுத்தும், அவர்கள் நல்ல முறையில் வாழவும், கிராம விளைவில் உரிய பங்[illegible]டையவும் கவனித்து வந்தார்கள். அரசாளும் அரசன் இவைகளில் தலையிடுவது கிடையாது; அரசனுக்குரிய தீர்வை பங்கை மட்டும் பெற்றுக் கொண்டு திருப்தியாகவும் இருந்தான். இந்த விதத்தில் கூட்டுப்பொறுப்பும் கூட்டு ஒற்றுமையும் கிராம பொதுநல உணர்ச்சியும் கிராமத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருந்தது.

இன்றும் கிராம பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆனால் மூலைமுடுக்குகளை சுத்தம் செய்வதிலும், விளக்குகளைப் போடுவதிலும்தான் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. கிராம விளைநிலங்கள் முழுமையும் உழைப்பின்றி மறைவில் நிற்கும் செல்வ நிலச்சுவான்தாரிடம்போய் சேர்ந்து விட்டன. இன்று கிராம பஞ்சாயத்தாருக்கு கிராம சுபீக்ஷத்தை நிலைகுலைத்து இந்த ஏழ்மை நிலைமக்கு கொண்டு சேர்த்த மில் பொருள்களை கிராமத்திற்குள் வர ஒட்டாமல் தடுக்க அதிகாரமும், சாத்தியமில்லை...

இதே சமயத்தில் ஒன்றரை நூற்றுண்டாக அன்னியனிடம் அடிமைப்பட்டுக்கிடந்த நம்நாடு, ஆள்பவனுக்கு சுபீக்ஷத்தை அளித்து, கிராமங்களின் ஒற்றுமையையும், கூட்டு உணர்ச்சியையும் இழந்துவிட்டது.

கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்களை நியமித்து நிலச்சுவான்தார்களை தனித்தனியாகப் பிரித்து அவர்களுக்குத் தனித்தனி சலுகைகளைக் காட்டி கிராம மக்களின் பொறுப்பை ஒரு சிலரிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டதினால் வேலையில்லாமல் உணவற்று நிற்கும் கிராம மக்கள் நிர்க்கதியாக்கப்பட்டனர். இன்று கிராம மக்கள் வேலையற்று பட்டினியால்வாடும் கிராம சகோதரனின் பொறுப்பு தங்களுடையதல்ல என நினைக்கும் நிலைமையேற்பட்டுவிட்டது. நகர வாசிகள் கிராமங்களைப்பற்றி நினைப்பதுமில்லை; அவர்களின் நிலைமையைக்கண்டு வருந்துவதுமில்லை.

ஜப்பானைப் பாருங்கள்! இன்று. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராட்டாமல் கிராமத்தில் உற்பத்தியான பொருள்களையும்; வீடுகளில் நடைபெற்றுவரும் குடிசைத்தொழில்களின் பொருட்களையும், தங்கள் சொந்த தேசத்தில் மில்களில் உற்பத்தியாகும் பொருள்களை பகிஷ்கரித்து, குடிசைத்தொழில் பொருள்களையே உபயோகித்து வருகிறார்கள். தங்கள் தேசமில் பொருள்களை மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவே உற்பத்தி செய்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் கிராமப் பொருள்களை பணத்தின் மூலமாக ஒப்பிட்டுப்பார்ப்பதில்லை; கூட்டு முறையிலேயே ஒப்பிட்டுப்பார்க்கிறார்கள். இதனால் நம் தேசத்தில் காணப்படும், கிராமத்திற்கும் பட்டணத்திற்கும் உள்ள வேற்றுமை, அங்கு காணப்படுவதில்லை. அவர்களிடம் நகரத்திற்கும், கிராமத்திற்கும் ஏற்பட்ட வித்தியாசம் ஜனத்தொகை ஒன்றே ஆகும். நம்தேசத்தில் கிராமத்தானுக்கும் நகரத்தானுக்கும் வருமானத்தில் எட்டுமடங்கு வித்தியாசம் காணப்படுகிறது. இவ்விதம் ஏற்படக் காரணம் எது? கிராமத்தார் தன் கிராமக் கைத்தொழிலாளர்களை பட்டினியால் மடியவிட்டு மில் பொருள்களை உபயோகிப்பதே காரணமாகும். கிராம நெசவாளி தன் சொந்த நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும், கிராம செக்கு எண்ணையையும், கிராமத்தில் நெய்யும் ஆடையையும் ஆதரிக்கவேண்டும் என்பதையே மறந்து விட்டார்கள். ஒருவருக்கொருவர் பரஸ்பர நன்மையை மறந்து தங்கள் அழிவை தாங்களே தேடிக்கொண்டு விட்டார்கள். பட்டணங்களில் வசிப்பவர்களை என்ன நினைப்பது, சொல்வது, அவர்களுடைய அலங்காரங்களையும், வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும் கவனித்தால் கிராம மக்களின் நினைவே அவர்களுக்கு இல்லை என்பது தெளிவாகிறது. 36 கோடி மக்கள் கொண்ட இந்தியா தேசம் கிராமங்களிலிருக்கும் 30 கோடி மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அமெரிக்க மக்கள் கையாளும் முறைகளைப் பின்பற்றி தீர்க்க முயற்சிகள் செய்தால், எப்படி அகற்ற முடியும்? அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே வேற்றுமைகள் பல உள்ளன. ஆகையால்தான் மகாத்மாஜி முப்பத்தாறு கோடி மக்களையும் இந்து மகாசமுத்திரம் அடித்துக்கொண்டு போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், விவசாயத்தை அடிப்படையாகவும் கிராமத்தில் விளையும் பொருட்களை மூலப் பொருள்களாகவும் கொண்ட கிராமக் கூட்டுறவு உழைப்பின் மூலம்தான் முடியும் என பலதடவைகள் தெரிவித்திருக்கிறார்கள்.

கிராமக் கைத்தொழிலும், ஆதாரக்கல்வியும் எப்படி கிராமங்களில் வேர் ஊன்ற செய்யமுடியும்? இவைகள் யாவும் மகாத்மாவின் நிர்மாண வேலைத் திட்டங்களின் மூலம்தான் சாதிக்கமுடியும். இவைகள்தான் தற்சமயம் மிகவும் அவசரமாகத் தேவைப்படும் பொருளாதார நிலமையையும் சமாளிக்க முடியும். சுயராஜ்ய இயக்கத்தில் நிர்மாண திட்டங்களை ஒன்று சேர்த்து திட்டங்களை அமைத்ததின் காரணமாகவே. மகாத்மா இந்திய மக்களின் புரட்சிகரமான உணர்ச்சிகளை தட்டிஎழுப்ப முடிந்தது. ஆகவே பூதான யக்ஞம், சம்பத்துதானம், சிரமதானம் என்ற முக்கூட்டுத் திட்டம், தக்க சமயத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் ஏற்பட்டிருக்கிறது.

என்று நிலப்பிரச்னை தீர்க்கப்படுகிறதோ, இருப்பவர்கள் இல்லாதாருக்கு பங்கிட்டுக் கொடுக்கிறார்களோ, அன்றுதான் கிராமக் குடியரசுக்கும் உண்மையான கிராம ராஜ்யத்திற்கும், உண்மை

3-JAN 1956
ADRAS

யான அஸ்திவாரம் இட்டதாகக் கருதப்படும். சம்பூரண கிராம சேவை, கதர், கிராமக் கைத்தொழில், ஆதாரக்கல்வி, தேசசேவை முதலிய நிர்மாணத்திட்டங்கள் இந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்ட கட்டிடங்களாகும்.

இதன் பிறகே கிராம மக்கள் கிராம முன்னேற்றத்திற்காகவும், கிராம மக்களுக்காகவும், இம்முறையில் தேசியத்திட்டங்களுக்காகவும் திட்டங்கள் காணமுடியும். இதுவே உண்மையான ''ஜனதாராஜ்'' என்ற மக்களின் இராஜ்யமாகும்.

— அ. வா. சகஸ்ரபுத்தே

## நெல்லை ஜில்லா கிராமோதய கதர் சங்கங்களின் பாராட்டத்தக்க புது முயற்சிகள்

திருநெல்வேலி ஜில்லாவில் விளாத்திகுளம் வட்டகையில் சென்ற 5, 6 வருடங்களாக மழையின்மையின் காரணமாக கடும்பஞ்சம் ஏற்பட்டு விவசாயிகள் புயலில் அகப்பட்ட கப்பல்போல் தத்தளித்துக்கொண்டிருந்த சமயம் வெளி உதவி ஒன்றும் கிடைக்காமல் போகவே நிர்க்கதியான நமக்கு ராட்டையே உற்றதுணையென தீவிரமாக நூற்பதை கைக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். அச்சமயம் அவ்வட்டகையில் சர்க்கா சங்கத்தின் புதிய திட்டப்படி பல கிராமங்களில் சங்கங்கள் அமைக்கப்பட்டு வேலைகள் நடந்துவருவதின் காரணமாக உடைந்த உள்ளங்களில் நம்பிக்கை ஏற்பட்டது.

இவ்வருடம் அதிர்ஷ்ட வசத்தால் நல்ல மழை பெய்ததால் நிலத்தில் விளைச்சல் திருப்திகரமாக ஏற்பட்டது என்றாலும் மகசூலைத் தீவிரமாக கவனித்த காலத்தில் நூற்பு தடைபட்டு விட்டதால் துணி வாங்குவதற்கு தானியத்தை விற்க மனம் வரவில்லை. அதே சமயம் சர்வோதய பக்ஷத்தில் கதருக்கு சங்கத்தின் விசேஷக் கமிஷன் கொடுக்க ஏற்பாடாயிருந்தது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ள இயலாத நிலையில் சங்கம் அவர்களிடமிருந்த தானியத்தை வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாக கதரைத்தரவே, மனமுவந்து வாங்கிக்கொண்டார்கள். இவ்வகையில் 31885 பட்டணம்படி தானியத்திற்கு ஈடாக ரூ. 10,000 பெறுமான கதர் வாங்கிக்கொண்டார்கள். ஷை தானியத்தை பிறகு நூல் நூற்றுக் கொடுத்து திரும்பப் பெற்றுக்கொள்ளவும் போதிய ஏற்பாடு செய்யப்பட்டதின் காரணமாக மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த முறையினால் குறைந்த விலையில் தானியத்தை விற்றுவிட்டு பின்னர் ஏற்ற விலையில் வாங்கி அதன்மூலம் ஏற்படும் பெருவாரியான நஷ்டம் தவிர்க்கப்பட்டது. இந்த முறைக்கு கிராமோதய சங்கங்களே பொறுப்பை ஏற்றுக்கொண்டன. இதனால் கிராமங்கள் தங்களுக்குத் தேவையான உணவு, உடைக்கு பிற இடங்களை நம்பி ஏமாற்றமும், நஷ்டமும் அடையாமல், சுய தேவைப்பூர்த்தி செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேற்கண்ட பண்டமாற்றுதல் முறை கிராமங்களுக்கு பெரிதும் நன்மை அளிக்கும் என்பதற்கு இதுவே சான்றாகும்.

— ப. ராமசாமி ரெட்டியார்.

## ஒரு திருத்தம்

*['கிராமோதயம்' இதழ் 8-ல் ''கைராட்டை ஹோட்டல்'' என்ற தலைப்பின்கீழ் 'தினமணி' பத்திரிக்கையின் துணை ஆசிரியர் திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள் காந்திநகரில் பேசியதன் சுருக்கம் தரப்பட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அதில் சிறு தவறு ஏற்பட்டுவிட்டது. அதை எங்களுக்கு எடுத்துக்காட்டி, திருத்தத்திற்கான விளக்கமும் தந்துள்ளார் திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள். அவருக்கு எமது நன்றி. அவரது விளக்கத்தை கீழே தருகிறோம்.] — ஆசிரியர்*

நான் ஸ்ட்ராட்போர்டு ஆன் ஆவனுக்குச் சென்றிருந்தபோது ''கைராட்டை'' (Spinning wheel) என்ற பெயருடைய ஹோட்டலில் தங்கியதாக 'கிராமோதயம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் தங்கியிருந்த ஹோட்டலின் பெயர் ''ஷேக்ஸ்பியர் ஹோட்டல்.'' அதற்கு எதிரே கைநூற்பு, கைநெசவுத் துணிகளைத் தயாரித்து விற்கும் வர்த்தக ஸ்தாபனமொன்று உண்டு. அதற்குத்தான் 'கைராட்டை' (The spinning wheel) என்று பெயர். அங்கு உள்ளே மகாத்மாவின் வெண்கலச்சிலையொன்று பிரகாசமாக வைக்கப்பட்டிருக்கிறது. கைநூல் நெசவு கம்பள ஆடை நாள்பட உழைக்கிறது என்றும், பல வீடுகளில் உள்ள பெண்கள், முக்கியமாக வயோதிகர்கள் இவற்றை ஓய்வு நேரத்தில் தயாரித்துத் தருவதாகவும், சுமாரான லாபம் கிடைப்பதாகவும் அதை நடத்தும் அம்மணி சொன்னார்.

சென்னை, 18-2-'54.

ஏ. ஜி. வெங்கடாச்சாரி,
'தினமணி' துணை ஆசிரியர்.

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

### நமது சக்தி: நமது எண்ணங்கள்

வர்கள் வாழ்க்கையில் தோல்வியடையமாட்டார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் பூதான இயக்கத்தின் கருத்தை நன்றாக புரிந்து கொண்டார்களானால் தேசத்தை அவர்களால் மேன்மையடையச் செய்ய முடியும். சங்கராச்சாரியார், ராமானுஜர், மத்வாச்சாரியார் இவர்கள் சிறந்த ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு இருந்த மதிப்பும், செல்வாக்கும் பெரிய அரசர்களுக்குக் கூட இருந்ததில்லை. இவர்கள் தேசத்திற்கு உண்மையான கல்வியைக் கொடுத்தார்கள். இவ்விதமான வேலையை ஆசிரியர்களும், மாணவர்களும் செய்தீர்களானால் நமது தேசத்திற்கு உரித்தான உன்னத ஸ்தானம் கிடைக்குமென்பதில் எனக்கு சந்தேகமில்லை.

— வினோபாஜி.

*(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)*

## இந்த இதழில்


| | |
|---|---|
| சாம்ராஜ்ய வாதத்தை நோக்கி முன்னேற்றமா? | 43 |
| பூதானமும் கிராமக் குடியரசும் | 43 |
| நமது சக்தி: நமது எண்ணங்கள் | 44 |
| நெல்லை ஜில்லா கிராமோதய சங்கம் | 48 |


''கிராமோதயம்'' சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.